# வணக்கம்

ஆகாஷ்வானி-புதுச்சேரி
மாநிலச் செய்திகள்
வாசிப்பவர்-நாராயணசாமி
தேதி-15.10.2026 நேரம்- மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று, காணொலி காட்சி மூலம், லடாக் பகுதிக்கான, 5 முக்கிய வளர்ச்சி திட்டங்களை, தொடக்கி வைத்தார்.
- ஆசிய விளையாட்டு போட்டிகளில், 85 பதக்கங்களை வென்று திரும்பி உள்ள இந்திய விளையாட்டு வீரர்- வீராங்கனைகளை, பிரதமர், இன்று மாலை, புதுடெல்லியில் சந்தித்து கலந்துரையாடினார்.
- பண்டிகைக் காலத்தில், சர்க்கரை வியாபாரிகளின் கையிருப்பு வரம்பை, ஆயிரம் குவிண்டாலாகவும், கையிருப்புக், காலத்தை, 15 நாட்களாகவும் குறைத்து, மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.
- தமிழ்நாடு, புதுச்சேரி-காரைக்கால் உட்பட, தென்னிந்தியாவின் தென் பகுதிகளில், வடகிழக்கு பருவமழை, இன்று தொடங்கி உள்ளது.

## மோடி-லடாக்

பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று, காணொலி காட்சி மூலம், லடாக் பகுதிக்கான, 5 முக்கிய வளர்ச்சி திட்டங்களை, தொடக்கி வைத்தார். இத்திட்டங்களின் மொத்த மதிப்பு 3 ஆயிரத்து 350 கோடி ரூபாயாகும். லடாக் பகுதியின் வளர்ச்சி புதிய அத்தியாயமாக திகழும் இத்திட்டங்களால்,

பிராந்தியத்தில், குடிநீர், மின்சாரம், மற்றும் போக்குவரத்து வசதிகள் மேம்படும் என்று அவர் கூறினார். இன்று பிரதமர் தொடக்கி வைத்த திட்டங்களில், லே விமான நிலையத்தின் புதிய பயணியர் முனையம், தொலைதூர **ஜன்ஸ்கார் பள்ளத்தாக்கு** வழியாக, லே பகுதியை, இமாச்சல பிரதேசத்தின் தர்ச்சா பகுதியுடன் இணைக்கும் புதிய சாலை ஆகிய திட்டங்கள் அடங்கும். ஹிம் சரோவர் திட்டத்தின் கீழ், 40 கிராமங்களில் நிறுவப்பட்டுள்ள நீர் நிலைகளையும், சிந்துகாட் பகுதியில், தொன்மையான **பாறை செதுக்கல்களை** பாதுகாக்க, நாட்டிலேயே முதல் முறையாக அமைக்கப்பட்டுள்ள, தொல்லியல் பூங்காவையும், பிரதமர் திறந்து வைத்தார்.

## ே ாடி-விளையாட்டு

ஜப்பானில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு போட்டிகளில், 21தங்கம் உட்பட 85 பதக்கங்களை வென்று திரும்பி உள்ள இந்திய விளையாட்டு வீரர்- வீராங்கனைகளை, பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மாலை புதுடெல்லியில் சந்தித்து கலந்துரையாடினார். இம்முறை ஆசிய விளையாட்டு போட்டிகளில் இந்தியா 4-ஆம் இடம் பெற்றுள்ளதும், பதக்கப் பட்டியலில் முதல் 5 இடங்களுக்கு உள்ளாக இந்தியா உயர்வது, தொடர்ச்சியாக இது, 2-ஆவது முறையாகும் என்பதும், குறிப்பிடத் தக்கது.

**மக்கள் சேவை மூலமான தேச சேவை**

மக்கள் சேவை மூலமான தேச சேவை என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், பொது சேவையில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் சேவைப் பயணம், இன்று வரை அயராத உறுதிப்பாட்டுடன் தொடர்கிறது. சேவை மற்றும் நல்லாட்சி என்னும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப, 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை நோக்கி, நாடு தொடர்ச்சியாக பயணித்து வருகிறது. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி - அனைவருக்கும் சமூக அதிகாரம் என்னும் அரசின் கொள்கையினால், நாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நாட்டில் புதுமைப் படைப்புகளை ஊக்குவிக்கும் வகையில் அட்டல் இன்னோவேஷன் இயக்கம் தொடக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள பலன்கள் குறித்து, இன்று, சேவா சங்கல்ப் அபியான் என்னும், இந்த சிறப்பு தொடரில் காண்போம்...

## மக்கள் சேவை மூலமான தேச சேவை-2 (15)

ஆராய்ச்சிகள் மற்றும் ஸ்டார்ட்-அப் செயல்பாடுகள், பெரு நகரங்களிலும் ஒருசில உயர்கல்வி நிறுவனங்களிலும், மட்டுமே காணப்பட்ட நிலையில் மாற்றி புதுமையாக்க முயற்சிகளின் பூகோளப் பரப்பை விஸ்தரிக்கும் வகையில், நிதி ஆயோக் அமைப்பின் கீழ், அட்டல் இன்னோவேஷன் இயக்கம், 2016-ஆம் ஆண்டில் தொடக்கப்பட்டது. குறிப்பாக நகரங்களுக்கு வெளியே உள்ள பள்ளி மாணவர்களுக்கும்,

அறிவியல் செயல்முறை வாய்ப்புகளை வழங்க இந்த இயக்கத்தில் முக்கியத் துவம் அளிக்கப்படுகிறது. இதற்கு ஏதுவாக 3-டி பிரிண்டர்கள்,சென்சார் உணர் கருவிகள், ரோபோட்டிக் தொகுப்புகள், மற்றும், மின்னணு சாதனங்கள் அடங்கிய அட்டல் டிங்கரிங் ஆய்வகங்கள், 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 60 சதவிகிதம் அரசுப் பள்ளிகளாகவும், 50 சதவிகிதம் கிராமப் புற பள்ளிகளாகவும் அமைந்துள்ளன. இயக்கத்தின் 2-ஆம் அடுக்காக 72 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள அட்டல் இன்குபேஷன் மையங்கள் மூலம் இதுவரை ஆயிரக் கணக்கிலான ஸ்டார்ட்-அப் முயற்சிகளுக்கு தேவையான எல்லா உதவிகளும் வழங்கப்பட்டு, பல்லாயிரக் கணக்கிலான வேலை வாய்ப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன. அட்டல் புதுமையாக்க இயக்கத்தை 2028-ஆம் ஆண்டு வரை நீட்டிக்கவும், மத்திய அரசு ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. புதுமையாக்க செயல்பாடுகள் மற்றும் தொழில் முயற்சிகள் பள்ளி அளவிலேயே தொடங்குவதை ஊக்குவிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள அட்டல் இன்னோவேஷன் இயக்கத்தினால், சமுதாயத்தின் பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் மனோபாவம், பெரும் எண்ணிக்கையிலான மாணவர்களிடையே தூண்டப்பட்டுள்ளதில் ஐய்யம் இல்லை.

## யுபிஐ

தனிநபர்களுக்கும் வணிகர்களுக்கும் இடையே, 2 ஆயிரம் ரூபாய்க்கும் அதிகமான மதிப்பில் மேற்கொள்ளப்படும் யுபிஐ

பரிவர்த்தனைகளுக்கு MDR கட்டணம் விதிக்கும் நடைமுறைகள், இன்று முதல் தொடங்குவதாக இருந்த நிலையில், பண்டிகை காலத்தைக் கருத்தில் கொண்டு தீபாவளிக்கு பின்னர் அமலாகும் என தேசிய பணப்பட்டுவாடாக் கழகம் தெரிவித்துள்ளது. கட்டண நடைமுறைகள் தொடங்கிய பின்னரும், தனிநபர்களுக்கும் வணிகர்களுக்கும் இடையிலான 96 சதவிகித பரிவர்த்தனைகள் பாதிக்கப்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்க்கரை

சர்க்கரை வியாபாரிகள் கையிருப்பில் வைத்துக் கொள்ளத் தகுந்த சர்க்கரை வரம்பை, ஆயிரம் குவிண்டாலாகவும், கையிருப்புக், காலத்தை, 15 நாட்களாகவும் குறைத்து, மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. பண்டிகை காலத்தில் பதுக்கலைத் தடுத்து சர்க்கரையின் சந்தை வரத்தை பராமரிக்கும் வகையிலான இந்த உத்தரவு, இன்று முதல், வரும் நவம்பர் மாதம் வரை அமலாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து கூடுதல் விவரங்கள்.............

கொல்கத்தா நகரம் மற்றும் அசாம் மாநிலத்தில் மட்டும், வியாபாரிகளுக்கான சர்க்கரை கையிருப்பு உச்சவரம்பு, 2 ஆயிரம் குவிண்டாலாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது. கொல்கத்தா வியாபாரிகள், உத்தரபிரதேஷ் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து சர்க்கரை வாங்கி, வடகிழக்கு மாநிலங்களுக்கு அனுப்பி வைப்பதையும்,

வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான அசாமில், பூகோள ரீதியிலான போக்குவரத்து சிக்கல்கள் இருப்பதையும் கருத்தில் கொண்டு, சர்க்கரை கையிருப்பு வரம்பு, உயர்த்தி நிர்ணயிக்கப்படுவதாக மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சில்லரை விற்பனை சந்தையில் சர்க்கரையின் விலை, கடந்த ஆகஸ்டு மாதத்துடன் ஒப்பிடுகையில், தற்போது, சுமார் 15 சதவிகிதம் குறைந்திருப்பதாகவும், சர்க்கரை ஆலைகளின் உற்பத்திச் செலவு, சுமார் 25 சதவிகிதம் குறைந்திருப்பதால், சில்லரை விற்பனை விலை மேலும் குறையும் என எதிர்பார்க்கப் படுவதாகவும் அமைச்சகம் கூறி உள்ளது. விலைக் குறைவின் பலன்களை, மொத்த மற்றும் சில்லரை வியாபாரிகள், உடனடியாக நுகர்வோருக்கு வழங்க வேண்டும் என்றும், அமைச்சகம் வலியுறுத்தி உள்ளது.

## புதுச்சேரி-அரங்கம்

புதுச்சேரியில், லாஸ்பேட் பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கத்திற்கு, ஸ்ரீ அடல் பிகாரி வாஜ்பாய் உள் விளையாட்டு அரங்கம் என பெயர் சூட்டும் வகையிலான பெயர்ப் பலகையை, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று திறந்து வைத்தார். முதலமைச்சர் திரு ரங்கசாமி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மாநில உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம்,

விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் திரு ராஜசேகரன், மாநிலங்களவை உறுப்பினர் திரு செல்வகணபதி, சட்டமன்ற உறுப்பினர் திரு அசோக் ஆனந்த மற்றும் அதிகாரிகளும், விளையாட்டு வீரர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## புதுச்சேரி-கலாம்

புதுச்சேரியில் முன்னாள் குடியரசு தலைவர் அப்துல்கலாம் பிறந்த நாள் இன்று அரசு சார்பில் கொண்டாடப்பட்டது. லாஸ்பேட் அறிவியல் கோளரங் வளாகத்தில் உள்ள அன்னாரின் சிலைக்கு துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி, ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இவர்களைத் தொடர்ந்து, அமைச்சர் திரு சிவக்காகொழுந்து, சட்டமன்ற உறுப்பினர் திரு அசோக் ஆனந்த், மற்றும், பள்ளி-கல்லூரி மாணவ-மாணவிகளும் அப்துல்கலாம் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

## வானிலை

தென்னிந்தியாவின் தென் பகுதிகளில் வடகிழக்கு பருவமழை இன்று தொடங்கி உள்ளது. தமிழ்நாடு, புதுச்சேரி-காரைக்கால் கடலோர ஆந்திரா, தெற்கு உட்புற கர்நாடகா, மற்றும், கேரளா-மாகே பகுதிகள் இதில் அடங்கும். இன்று கோவை, நீலகிரி, தேனி, நாமக்கல், சேலம், ஈரோடு, தர்மபுரி,

திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களின் ஒரிரு இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தஞ்சை, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் உள்ளிட்ட மாவட்டங்கள், மற்றும், புதுச்சேரி -காரைக்கால் பகுதிகளில் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக் கூடும் என்றும் தமிழகத்தின் இதர பகுதிகளின் அநேக இடங்களில், மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 21-ஆம் தேதி வரை மழை நீடிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, கரூர் மாவட்டம் தோகைமலை, மயிலாடுதுறை மாவட்டம் திருவெண்காடு ஆகிய இடங்களில், தலா 11 செமீ மழை பதிவாகி உள்ளது. காரைக்காலில் 8 சதவிகித மழை பெய்துள்ளது.

## ழை-எச்சரிக்கை

பருவமழை காலத்தில் தேவையற்ற பயணத்தை பொது மக்கள் தவிர்க்க வேண்டும் என்றும் வெள்ள அபாயம் அதிகம் உள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும் புதுச்சேரி மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது. நீர் நிலைகளில் குளித்தல் மற்றும் செல்பி எடுத்தல் கூடாது என்றும் மரங்கள் மற்றும் மின்கம்பங்களின் கீழ் நிற்க கூடாது என்றும் ஆணையம் அறிவுறுத்தி உள்ளது.

வீடுகளில், உணவு, குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை பாதுகாப்பாக வைத்திருக்கவும், வடிகால் வாய்க்கால்களில் கழிவுகளை கொட்டாமல் தவிர்க்கவும் அறிவுறுத்தப் பட்டுள்ளது. மீனவர்கள் கடலுக்குள் செல்வது தொடர்பாக வானிலை முன்னெச்சரிக்கைகளை கடைபிடிக்க வேண்டும் என்றும் சமூக ஊடகங்களில் வெளியாகும் ஆதாரமற்ற செய்திகளை நம்ப வேண்டாம் என்றும் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது. மழைக்கால அவசர உதவிகள் மற்றும் புகார்களுக்கு 1077, 1070 உள்ளிட்ட எண்களில் தொடர்பு கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## புதுச்சேரி-பிரஞ்ச்

புதுச்சேரியில் உள்ள **லிசே பிரான்சே** பிரஞ்ச் பள்ளியின் 200-ஆம் ஆண்டு விழா, இன்று மாலை நடைபெறுகிறது. இந்தியாவிற்கான பிரஞ்ச் தூதர் திரு **தியரி மாத்தூ**, வெளிநாட்டு பிரஞ்ச் கல்விக்கான பிரஞ்ச் ஏஜென்சியின் தலைமை இயக்குநர் திரு **அலெக்சாண்டர் மோரீஸ்** ஆகியோர், 6 நாள் கொண்டாட்டங்களை தொடக்கி வைக்கிறார்கள். துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோரும் விழாவில் பங்கேற்கிறார்கள். 400-க்கும் மேற்பட்ட பழைய மாணவர்கள் உட்பட, பெரும்பாலும் பிரான்சில் இருந்து வரும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட விருந்தினர்கள், கொண்டாட்டங்களில் பங்கேற்க இருப்பதாக, புதுச்சேரியில் உள்ள பிரஞ்ச் தூதரகம் தெரிவித்துள்ளது.

1826-ஆம் ஆண்டு பாண்டிச்சேரி ராயல் கல்லூரி என்ற பெயரில், அப்போதைய பிரஞ்ச் ஆளுநரால் தொடக்கப்பட்ட லிசே பிரான்சே பிரஞ்ச் பள்ளி, பல்வேறு அரசியல்-சமூக மாற்றங்களைத் தாண்டி, புதுச்சேரியின் கல்வி பாரம்பரியத்தில் முக்கிய இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளதும், தற்போது இப்பள்ளியில், மழலையர் வகுப்பு முதல், 2-ஆம் ஆண்டு இடைநிலை கல்வி வரை, 400-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருவதும் குறிப்பிடத் தக்கது.

## புதுச்சேரி-பல்கலைக்கழகம்

புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் சிறப்பு விரிவுரைத் தொடர் நிகழ்ச்சி, மற்றும், 41-ஆவது நிறுவன நாள் விழா, பல்கலைக் கழகத்தின் கலாச்சார மற்றும் மாநாட்டு மையத்தில் நாளை நடைபெற உள்ளது. பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர் பிரகாஷ்பாபு தலைமையிலான இவ்விழாவில், மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் திரு ஆர் வெங்கட்ரமணி, அறிவியல்-தொழில் நுட்பம் உள்ளிட்ட பலவற்றின் எதிர்காலம் என்பது குறித்து சிறப்பு விரிவுரையாற்றுகிறார். ஐதராபாத் நல்சர் சட்டப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் ஸ்ரீகிருஷ்ண தேவராவ் வழங்கும் சிறப்பு சொற்பொழிவும் விழாவில் இடம் பெறும்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று, காணொலி காட்சி மூலம், லடாக் பகுதிக்கான, 5 முக்கிய வளர்ச்சி திட்டங்களை, தொடக்கி வைத்தார்.

ஆசிய விளையாட்டு போட்டிகளில், 85 பதக்கங்களை வென்று திரும்பி உள்ள இந்திய விளையாட்டு வீரர்- வீராங்கனைகளை, பிரதமர், இன்று மாலை, புதுடெல்லியில் சந்தித்து கலந்துரையாடினார்.

பண்டிகைக் காலத்தில், சர்க்கரை வியாபாரிகளின் கையிருப்பு வரம்பை, ஆயிரம் குவிண்டாலாகவும், கையிருப்புக், காலத்தை, 15 நாட்களாகவும் குறைத்து, மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு, புதுச்சேரி-காரைக்கால் உட்பட, தென்னிந்தியாவின் தென் பகுதிகளில், வடகிழக்கு பருவமழை, இன்று தொடங்கி உள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

------------------------